2026 சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள், 18.4.2026 அன்று, கோபிசெட்டிபாளையம், மொடக்குறிச்சி, திருச்செங்கோடு, சங்ககிரி, வீரபாண்டி, இராசிபுரம், கரூர், கிருஷ்ணராயபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு :

● கோபிசெட்டிபாளையம், குன்னத்தூர் சாலை மாரியம்மன் கோயில் பகுதியில், கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் என்.நல்லசிவம் அவர்களையும், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் எம். சிவபாலன் அவர்களையும் ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

● ஈரோடு, பெருந்துறை, பேருந்து நிலையம் பகுதியில், பெருந்துறை சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் அவர்களையும், பவானி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் கே.ஏ.சந்திரசேகர் அவர்களையும் ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டார்.

● மொடக்குறிச்சி, ஆவல் பூந்துறை பகுதியில், ஈரோடு மேற்குத் தொகுதியின் கழக வேட்பாளர், அமைச்சர் சு.முத்துசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ப.கோபிநாத், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் சா.செந்தில்நாதன் ஆகியோரை ஆதரித்துப் பரப்புரை செய்தார்.

● திருச்செங்கோடு அண்ணா சாலை பகுதியில், திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியின் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிப் பொதுச்செயலாளர், வேட்பாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களை ஆதரித்துப் பரப்புரை செய்தார்.

● சங்ககிரி எடப்பாடி பிரிவு சாலைப் பகுதியில், சங்ககிரி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் மு.மணிகண்டன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.

● வீரபாண்டி பனமரத்துப்பட்டி சந்தை திடல் பகுதியில், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர், டாக்டர் ஆ.கா.தருண் அவர்களை ஆதரித்துப் பரப்புரை செய்தார்.

● இராசிபுரம் பேருந்து நிலையம் பகுதியில், இராசிபுரம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர், அமைச்சர் மா.மதிவேந்தன் அவர்களை ஆதரித்துப் பரப்புரை செய்தார்.

● கரூர் பேருந்து நிலையப் பகுதியில், கரூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் ஆசி.எம்.தியாகராஜன், அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் ஆர். இளங்கோ ஆகியோரை ஆதரித்துப் பரப்புரை செய்தார்.

நாமக்கல் 35 Km Namakkal
ஜவஹர் பஜார் Jawahar Bazaar
திருச்சி 82 Km Trichy

● கிருஷ்ணராயபுரம் கடைவீதி பகுதியில், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் சி.கே.ராஜா, குளித்தலை சட்டமன்ற தொகுதியின் கழக வேட்பாளர் கே.கே.செல்வகுமார் ஆகியோரை ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டார்.